# திருக்குறள்

## அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் மூலமும் பரிமேலழகருரையும்

ஸ்ரீ. உ. வே. வை. மு. கோபாலக்ருஷ்ணமாசார்யர்

குறிப்புரையுடன்

**வை. மு. நரசிம்மன்**

வை. மு. கோபாலக்ருஷ்ணமாசார்யர் கம்பெனி

17, தெளிசிங்கப்பெருமாள் கோயில் தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை-5.

…சுவாவசு ௵
…வைகாசி ௴ } 1965 [விலை ரு. 10

# முப்பால்—பொருளடக்கம்


| | |
|---|---|
| அறத்துப்பால் ... | 1—304 |
| பொருட்பால் | 1—572 [+1—27] |
| காமத்துப்பால் ... | 1—176 |
| திருவள்ளுவமாலை ... | 1—80 |

# அறத்துப்பால்—பொருளடக்கம்


1. முகவுரை ... i
2. முன்னுரை ... iii
3. திருவள்ளுவர் வரலாறு ... iv
4. திருக்குறள் வரலாறு ... xi
5. பரிமேலழகர் வரலாறு ... xvii
6. அறத்துப்பாலின் இயல் அதிகாரம் என்பவற்றின் அட்டவணை ... xxii
7. திருக்குறள் அறத்துப்பால் மூலமும் பரிமேலழகருரையும் குறிப்புரையும் 1—286
8. செய்யுள் முதற்குறிப்பகராதி ... 286
9. அறத்துப்பால் மூலம் பரிமேலழகருரை என்பவற்றின் அரும்பதம் முதலியவற்றின் அகராதி ... 289
10. பிழைத்திருத்தம் ... 304

# முகவுரை.

தமிழ்மொழி சிறப்புற்றதாக மதிக்கப்படுவதற்குரிய பல காரணங்களுள் திருக்குறளைப் பெற்றிருப்பதென்பது முதன்மையான காரணமெனின், அது மிகையாகாது. இதன் சிறப்பினைக் கருதியே, இது பலமொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுப் பலராலும் ஆவலோடு கற்கப்பட்டு வருகின்றது.

ஆயினும், மூலத்தைப் படித்த மாத்திரத்திலேயே எவர்க்கும் இந்நூலின் விரிந்த பொருள் விளங்குவதன்று. ஆகவே, இதற்கு உரை இன்றியமையாததாகும். இந்நூற்குப் பழமையாகவே பல உரைகள் இருக்கின்றன என்று ஏற்படினும், பரிமேலழகருரையும் மணக்குடவருரையுமே அச்சாகி வெளிவந்திருக்கின்றன; மற்றைய உரைகள் இப்போது கிடைப்பதும் அரியன.

வெளிவந்துள்ள இருவுரைகளுள்ளும் பரிமேலழகருரையே யாவராலும் பாராட்டப்படுகின்றது. அவ்வுரை, நூலாசிரியருடைய கருத்துக்கு ஏற்பப் பதப்பொருளை விளக்குவதோடு பல இடங்கட்கும் விசேடமான பதசாரம், இன்றியமையா இலக்கணக்குறிப்பு, வேறுமையான பொருள், பிறருரை மறுத்தல், அணி, பாடபேதம் முதலிய பல விஷயங்களையும் கொண்டது; அவ்வுரையைப் படிக்கிறவர் பல விஷயங்களையு முணர்ந்த புலவராவ ரென்பது திண்ணம்.

ஆயினும், படிக்கின்ற நிலையிலிருப்பவர்க்கு அவ்வுரைப் பொருள் முழுவதையும் உள்ளபடி அறிதல் முடியாது. அதற்குத் தக்க ஒரு குறிப்புரை யிருப்பின் நலம். இக்காலத்தில் உரையெழுதிப் பொருளைத் தெரிவிப்பதில் ஒத்தாருமிக்காரும் இல்லாது தலைசிறந்து விளங்கியவரும் அடியேனுக்குத் தமையன் முறையாகுபவரும் ஆசிரியருமான ஸ்ரீ-உ-வே. வை-மு-சடகோப ராமாநுஜாசார்ய ஸ்வாமிகள் திருக்குறளில் அவ்வப்போது யூனிவர்ஸிடியார் பரீக்ஷைக்குப் பாடமாக வைத்த பகுதிகளைப் பரிமேலழகருரையோடும் அதற்குத் தாமாக எழுதிய குறிப்புரையோடும் வெளியிட்டு வந்ததுண்டு: அப்பகுதிகள் அறத்துப்பால் முழுதுக்கும், பொருட்பாலில் இறுதியில் இரண்டொரு அதிகாரங்கட்குத் தவிர மற்றைப் பகுதிகட்கும் உள்ளன. அந்தக் குறிப்புரையை அப்பெரியார் எழுதி வெளியிடுதற்குத் துணையாயிருந்தவர், அடியேனுக்குந் தமிழிலக்கணவாசிரியரான ஸ்ரீ-உ-வே. சே-கிருஷ்ணமாசார்ய ஸ்வாமிகள் ஆவர். சிலசமயத்து நானும் உடனிருந்ததுண்டு.

அப்பெரியாரின் குறிப்புரையோடு பரிமேலழகருரையைப் பதிப்பித்தால், தமிழ் கற்போர்க்கு மிகவும் பயன்படுமென்று, திருவாளர் வித்துவான்-வேங்கடராஜுலு ரெட்டியாரும் மற்றும் சில அறிஞர்களும் வற்புறுத்திக் கூறியதுண்டு. அவர்கள் கூறியதைக் கடைப்பிடித்து,